# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8033658

1. District மாவட்டம் : Theni District PS: காவல்நிலையம் VS&AC, Theni. Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 04/18 Date: நாள் 27.11.18

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: as amended by the Prevention Sections பிரிவுகள்:
of Corruption (Amendment)
(iii) Act சட்டம்: Act 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 12.11.18, 14.11.18, 22.11.18 and 26.11.18
Date from : நாள் முதல் -
Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.11.18
Time : நேரம் 07.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம் 09.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 15Kms East
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி O/o the Village Administrative Officer, Thimmarasa Nayakanur Bit.II, Andipatty (TK), Theni (DT).
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Rengaraj
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Venkitasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1980
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில்
(g) Address : முகவரி Seetha Ram Dass Nagar, Thiruvalluvar Colony, Jakkampatty, Andipatty (TK), Theni (DT).

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Suresh Kumar,
Village Administrative Officer,
Thimmarasa Nayakanur Bit.II,
Andipatty (TK), Theni (DT).

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— NIL —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Computer typed Separate Sheet enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 27/11/18

15. Date & Time of despatch to the court: 27.11.18 10.30
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. SATHYASEELAN.
Rank: நிலை Deputy Supdt. of Police, VAC, Theni. No. எண் ..........

12. F.I.R. contents (Attach separate sheet if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**4/2018**-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது: தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் இன்று 27.11.2018-ம் தேதி 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா, ஜக்கம்பட்டி, திருவள்ளுவர் காலனி, சீதாராம்தாஸ்நகரைச் சேர்ந்த திரு.வெங்கிடசாமி மகன் திரு.V.ரெங்கராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் தற்போது மேற்படி முகவரியில் எனது மனைவி சோனியா மற்றும் குழந்தைகளுடன் வாடகை வீட்டில் குடியிருந்து கொண்டு தினக்கூலிக்கு தறி நெசவு தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் திம்மரசநாயக்கனூர் கிராமம் முத்துகிருஷ்ணாபுரம் ஆகும். எனது தாய் தந்தையர் இருவரும் 10 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டனர். எனது உடன்பிறந்தவர்கள் மூன்று அக்காக்காள் உள்ளனர். இதில் மூத்த அக்காவை சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் தாய்மாமா அய்யப்பனுக்கு மணம் செய்து கொடுத்தோம். அவர்களது மகள் சோனியாவை சென்ற 2006-ம் ஆண்டில் எனக்கு மணம் முடித்து வைத்தார்கள். தாய், தந்தை இறந்து விட்டதால் நான் எனது மாமனாரின் சண்முகசுந்தரபுரத்தில் உள்ள வீட்டில் சுமார் 4 ஆண்டுகளாக குடியிருந்தேன். பின்னர் ஜக்கம்பட்டியில் வாடகை வீட்டிற்கு வந்து விட்டோம். இந்நிலையில் எனது மாமனார் சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் அவர்கள் பூர்விகமாக அனுபவித்து வந்த புறம்போக்கு இடம் சுமார் 800 சதுரடி இடத்தை எனது மனைவி சோனியாவிற்கு கொடுத்து வீடு கட்டிக்கொள்ளும்படி சொன்னார். அதனால் நானும் எனது மனைவியும் அந்த இடத்தில் வீடு கட்ட முடிவு செய்து சென்ற ஆவணி 6 மதேதி (22.08.2018) பூமி பூஜை செய்து சுமார் 22X37 அடி என்ற அளவில் வானம் தோண்டி வீடு கட்ட ஆரம்பித்து பேஸ்மட்டம் கட்டினேன். அப்போது எங்களது இடத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள நிலத்தில் பிளாட் போட்டு விற்பனை செய்தவர்கள் எங்களை புறம்போக்கில் வீடு கட்டக்கூடாது பட்டா இருந்தால் கட்டுங்கள் என்று வீடு கட்ட விடாமல் தடுத்து விட்டார்கள். அவ்வாறு தடுத்தவர்கள் மீது நடவடிக்கை கேட்டு நானும் எனது மனைவி சோனியாவும் சென்ற 15.10.2018-ம் தேதியில் மாவட்ட ஆட்சியரிடம் நேரிலும், பெரியகுளம் கோட்டாட்சியருக்கும், ஆண்டிபட்டி வட்டாட்சியருக்கும் தபாலிலும் புகார் மனு கொடுத்தோம். அத்துடன் எனது மனைவி பெயரில் இலவச வீட்டுமனை பட்டா கேட்டு மனு ஒன்றை 29.10.2018-ம் தேதி திங்கள் கிழமை தேனி மாவட்ட ஆட்சியரிடம் மனுநீதி நாள் அன்று நானும் எனது மனைவியும் சென்று கொடுத்து அதற்கான ரசீதையும் பெற்றோம். அந்த மனு கொடுக்கப்பட்ட இரண்டொரு நாளில் சம்மந்தப்பட்ட சண்முகசுந்தரபுரம் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.அமுதா அவர்கள் என்னையும் எனது மனைவியையும் அவரது அலுவலகத்திற்கு அழைத்து விசாரித்து விட்டு எங்களது இடத்தையும் பார்வையிட்டார். அதன்பிறகு அவர் எனது மனைவியின் பெயரில் இலவச பட்டா பெற வேண்டுமென்றால், எனது சொந்த ஊரான முத்துகிருஷ்ணாபுரத்தில் எனது பெயரில் எந்த வீடோ அல்லது நிலமோ இல்லை

என்பதற்கு சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் ஒரு சான்று வாங்கி வந்து தரும்படி சொன்னார். அதன்பிறகு நவம்பர் முதல் வாரத்தில் ஒருநாள் காலை சுமார் 11.00 மணிக்கு ஜக்கம்பட்டி தண்ணீர் டேங்க் அருகில் உள்ள, எங்களது முத்துகிருஷ்ணாபுரத்திற்கான திம்மரசநாயக்கனூர் பிட்-II, கிராம நிர்வாக அலுவலர் திரு.சுரேஷ்குமார் அவர்களை நானும் எனது மனைவியும் சந்தித்து மேற்படி விவரத்தை சொல்லி எனது மனைவி பெயரில் இலவச வீட்டுமனை பட்டா பெற முத்துகிருஷ்ணாபுரத்தில் எனது பெயரில் வீடோ அல்லது நிலமோ எதுவும் இல்லை என்பதற்கு சான்று வழங்கும்படி கேட்டோம், அதற்கு அவர் விண்ணப்பம் ஒன்றை எழுதிக்கொண்டு வாருங்கள் என்று சொன்னார். அதன்படி நானும் மனு ஒன்றை தயார் செய்து அடுத்த நாள் காலை சுமார் 11.00 மணிக்கு வி.ஏ.ஓ திரு.சுரேஷ்குமார் அவர்களை வி.ஏ.ஓ அலுவலகத்தில் பார்த்து கொடுத்தேன். மனுவை வாங்கிக்கொண்ட திரு.சுரேஷ்குமார் அவர்கள் உங்கள் ரேசன் கார்டு ஜெராக்ஸ் ஒன்றை கொண்டு வாருங்கள் விசாரித்து சான்று தருகிறோம் என்று சொல்லி மறுநாள் வரச்சொன்னார். அதன்படி மறுநாள் காலை சுமார் 10.30 மணிக்கு நான் வி.ஏ.ஓ வை அவர் அலுவலத்தில் சென்று பார்த்து ரேசன் கார்டு ஜெராக்ஸ் கொடுத்தேன். அதை கிராம உதவியாளரிடம் கொடுக்கச் சொல்ல அவரிடம் கொடுத்தேன். பின்னர் வி.எ.ஓ தற்போது வேலை உள்ளது இன்னும் இரண்டு நாள் கழித்து வாருங்கள் என்றார். அதன்பிறகு நான் சென்ற 12.11.2018 ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு வி.ஏ.ஓ அலுவலகம் சென்று திரு.சுரேஷ்குமார் அவர்களை சந்தித்து எனது சான்று பற்றி கேட்டேன். அதற்கு வி.ஏ.ஓ அவர்கள் தனது கிராம உதவியாளர் ஒருவரை என்னுடன் அனுப்பி எங்களது சொந்த ஊரான முத்துகிருஷ்ணாபுரத்திற்கு மதியம் சுமார் 01.00 மணிக்கு சென்று எங்களது குடும்பம் புறம்போக்கில் குடியிருந்த சுமார் 150 சதுரடி அளவுள்ள இடிந்த நிலையில் இருந்த இடத்தை காண்பித்தேன். அதற்கு எங்களுக்கு பட்டா எதுவும் இல்லை என்ற விபரத்தினையும் சொன்னேன். அது பற்றி ஊரில் உள்ள பெரியவர்களிடம் விசாரித்தார்கள். பின்னர் மதியம் சுமார் 02.00 மணிக்கு வி.ஏ.ஓ அலுவலகம் வந்து வி.ஏ.ஓ திரு.சுரேஷ்குமாரிடம் கிராம உதவியாளர் விசாரித்த விபரத்தை சொன்னார். பின்னர் வி.ஏ.ஒ என்னிடம் கொஞ்சம் நேரம் வெயிட் பண்ணுங்கள் என்று சொன்னார். நானும் அவருக்கு எதிரே போடப்பட்டிருந்த பெஞ்சில் உட்கார்ந்திருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து மதியம் சுமார் 02.30 மணிக்கு வி.ஏ.ஓ திரு.சுரேஷ்குமார் என்னிடம் சான்று வழங்க ரூ.30,000/-ம் செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் என்ன சார் இவ்வளவு தொகை கேட்கிறீங்க என்றேன். அதற்கு அவர் நான் கொடுப்பதை வைத்து உனது மனைவி பெயரில் பட்டாவே கிடைக்க போகிறது. அதனால் ரூ.30,000/- ஆயிரம் பெரிய தொகை அல்ல என்றார். அதற்கு நான் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்துகிறேன் என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது என்று சொன்னேன். சரி என்று அவர் பணத்தை குறைத்து ரூ.13,500/- கொடுங்கள் என்றார். நானும் என்ன செய்வது என்று தெரியாமல் வந்து விட்டேன். பின்னர் தொடர்ந்து மழை மற்றும் புயல் பிரச்சனை இருந்ததால் சென்ற 19.11.2018-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு வி.ஏ.ஓ-வை அவரது அலுவலத்தில் சந்தித்து சான்று பற்றி கேட்டேன். அதற்கு வி.ஏ.ஓ திரு.சுரேஷ்குமார் நான் கேட்ட பணம் ரூ.13,500/- என்னாச்சு என்று

கேட்டார். அதற்கு நான் எனது நிலைமையை சொல்லி புரட்ட முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் சொத்து இல்லா சான்று உங்களுக்கு கொடுக்க எனக்கு தர பணம் இல்லை என்றால் எதற்கு இங்கே வர்ர போய் கேட்ட பணம் ரூ.13,500/- ரெடி பண்ணி கொண்டுவா என்றார். நானும் மனம் வேதனைப்பட்டு குடும்பம் நடத்தவே கஷ்டமான நிலையில் என்ன செய்வது என்று தெரியாமல் மீண்டும் 22.11.2018 ம் தேதி மதியம் சுமார் 01.00 மணி வாக்கில் வி.ஏ.ஓ ஆபிஸ் சென்று வி.ஏ.ஓ அவர்களை பார்த்து கொஞ்சம் குறைத்துக் கொள்ளும்படி கேட்டேன். அதற்கு அவர் ரூ.13,500/- க்கு மேல் குறைக்க முடியாது, பணம் ரெடி பண்ணிக் கொண்டு திங்கள் கிழமை வா என்றார். சரி என்று நானும் 26.11.2018 திங்கள் கிழமை காலை சுமார் 11.30 மணிக்கு வி.ஏ.ஓ அலுவலகம் சென்று வி.ஏ.ஓ அவர்களை பார்த்து மீண்டும் என் நிலைமையைச் சொல்லி குறைத்து கொள்ளும்படி கேட்டேன். அதற்கு அவர் ரூ.3,500/- யை குறைத்து ரூ.10,000/-த்தை நாளை செவ்வாய்கிழமை கொண்டு வந்து இந்த கையில் பணம் கொடுத்தால், இந்த கையில் சான்று வாங்கிக் கொள்ளலாம் இல்லா விட்டால் சான்று கிடைக்காது என்று முடிவாக சொல்லி விட்டார். நானும் வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்ததில் எனது மனைவி சோனியா பெயரில் இலவச வீட்டுமனை பட்டா பெற எனது பெயரில் வீடோ மற்றும் நிலமோ இல்லை என்பதற்கு சான்று கொடுக்க திம்மரசநாயக்கனூர் பிட்-II, கிராம நிர்வாக அலுவலர் திரு.சுரேஷ்குமார் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-த்தை கொடுத்து பெற எனது மனம் விரும்பவில்லை. அதனால் எனது பெயரில் சொத்து இல்லை என்று சான்று கொடுக்க என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்ட திம்மரசநாயக்கனூர் பிட்-II, கிராம நிர்வாக அலுவலர் திரு.சுரேஷ்குமார் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். நான் கலெக்டர், ஆர்டிஓ, தாசில்தார் அவர்களுக்கு கொடுத்திருந்த மனுக்களின் நகல்களையும், அவற்றிற்காக கொடுக்கப்பட்ட இரசீது நகல்களையும் இத்துடன் இணைத்து உள்ளேன். வி.ஏ.ஓ திரு.சுரேஷ்குமார் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/- ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxxx (V.ரெங்கராஜ், 27.11.18)

Sir, Received the complaint on 27.11.2018 at 07.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources, complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Theni V&AC Cr.No.04/2018, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 27.11.2018 at 09.00 hrs and took up investigation.

Original FIR along with Original Computer typed complaint of Tr.V.Rengaraj, S/o Venkitasamy, Seetharamdoss Nagar, Thiruvalluvar Colony, Jakkampatty, Andipatty Taluk, Theni District and with the relevant documents is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Theni and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai

(M.Sathyaseelan)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti Corruption,
Theni District.